**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No.48/2018**

Prosecution witness : 2

| | |
|---|---|
| Name: செல்வராஜ் | Caste: |
| Father'sName: | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

Accused present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 22.01.2026

**முதல் விசாரணை**:

நான் தற்போது திருப்பூர் மாநகர் சென்டரல் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 07.10.2017 அன்று பழனி தாலுகா காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது 11.00 மணிக்கு ரகசிய தகவலாளி நிலையம் ஆஜராகி பாப்பம்பட்டியில் கஞ்சா என்ற போதைப்பொருள் விற்பனை செய்வதாக சொன்ன தகவலை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து மேற்படி விபரத்தை பழனி தாலுகா வட்ட காவல் ஆய்வாளர் அவர்களிடம் தெரிவித்து அவரது உத்தரவின் பேரில் என்னுடன் சார்பு ஆய்வாளர் சாந்தி,காவலர்-1809-தனராஜ், முதல்நிலை பெண்காவலர்-646-கீதா மற்றும் ரகசிய தகவலாளியுடன் மேற்சொன்ன பாப்பம்பட்டிக்கு 11.30 மணியளவில் எதிரியின் வீட்டின் அருகில் சென்றபோது அங்கிருந்த கேரிப்பையுடன் நின்றிருந்த எதிரியை ரகசிய தகவலாளி அடையாளம் காட்டி மறைந்துகொள்ள நான் மற்றும் போலீஸ்பார்ட்டியுடன் எதிரியை வளைத்து பிடித்து விசாரிக்க மூக்கையா, வயது 61/2017, த/பெ.ராசுதேவர்,தெற்கு தெரு, பாப்பம்பட்டி, பழனி தாலுகா என்று சொன்னார். அவரிடம் நாங்கள் சுய அறிமுகம் செய்துகொண்டு எங்களுடன் அடையாள அட்டையை காண்பித்து எங்களுக்கு கிடைத்த தகவலை அவரிடம் சொல்லி உங்களை சோதனை செய்யவேண்டும் என்று சொல்லி நீங்கள்

விரும்பினால் குற்றவியல் நீதித்துறை நடுவரிடமோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனையிட உங்களுக்கு உரிமையுள்ளது என்று சொன்னபோது போலீஸ்பார்ட்டியாகிய நீங்களே சோதனை செய்து கொள்ளலாம் என்று கூறியதன் பேரில் சோதனை சம்மத கடிதம் தயார் செய்து அதை அவரிடம் படித்து காண்பித்தும் பொது ஜனசாட்சிகள் யாரும் முன் வராத காரணத்தால் காவலர்-1809-தன்ராஜ்,முதல்நிலை பெண்காவலர்-கீதா ஆகியோரை சாட்சியாக வைத்து சோதனை சம்மத கடிதம் தயார் செய்யப்பட்டது. பின்பு எதிரி வைத்திருந்த கேரிப்பையை சோதனை செய்தபோது அதில் உலர்ந்த கஞ்சா என்ற போதைப்பொருள் இருந்தது. அதை நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடைபோட்டு பார்த்தபோது 1கிலோ 100 கிராம் இருந்தது. அதன் அப்போதைய மதிப்பு சுமார் ரூ.11,000/- ஆகும். மேற்படி கஞ்சாவிலிருந்து மாதிரி பகுப்பாய்விற்காக 50கிராம் கஞ்சாவை எடுத்து அதை காக்கி பேப்பரால் மடித்து, நூலால் கட்டி,வ ழக்கு விபர சிலிப் ஒட்டி, போலீஸ்பட்டன் சீல் வைத்து அதற்கு S1 என குறியீடு கொடுக்கப்பட்டது. பின்னர் மாதிரி பகுப்பாய்வுக்கு எடுத்தது போக கைப்பற்றியதில் மீதம் இருந்த 1கிலோ 50 கிராம் கஞ்சாவை காக்கி பேப்பரில் மடித்து , நூலால் கட்டி, வழக்கு விபர சிலிப் ஒட்டி, போலீஸ்பட்டன் சீல் வைத்து அதற்கு P1 என குறியீடு கொடுக்கப்பட்டது. மேற்படி சொத்துக்களை காவலர்-1809-தனராஜ், முதல் நிலை காவலர்-கீதா ஆகியோர் முன்னிலையில் 12.00 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டது. மேற்படி எதிரி வைத்திருந்த கஞ்சாவை பற்றி விசாரித்தபோது தேனி மாவட்டம், வருசநாடு மலை பகுதியில் பெயர்,விலாசம் தெரியாத நபரிடம் குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்கும் பொருட்டு வைத்திருந்ததாக கூறினார். மேற்படி எதிரி மூக்கையா அரசு அனுமதியின்றி கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக 13.15 மணிக்கு கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்து, கைப்பற்றிய சொத்துக்களுடன் 15.30 மணிக்கு நிலையம் வரப்பட்டது. பின்பு பிரிவு57 ன் படி அறிக்கை தயார் செய்து பழனி தாலுகா காவல்நிலைய குற்ற எண்.361/2017 , ச/பி. 8(c) r/w 20(b) (ii) (B) NDPS சட்டப்படி வழக்கு பதிவு செய்து, வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்து படிவம்-91 மற்றும் கைதியை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு இந்த வழக்கில் மேல் விசாரணைக்காக காவல்

ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆகும். படிவம்-91 அ.சா.ஆ. 4 ஆகும். பிரிவு -57ன் படியான விரிவான அறிக்கை அ.சா.ஆ. 5 ஆகும். பகுப்பாய்வுக்கு சென்று திரும்பிய S1 என குறியீடு செய்யப்பட்ட கஞ்சா சா.பொ.1 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

மேற்படி தகவலை தனி தாளில் பதிவு பண்ணவில்லை என்றால் சரிதான். மேற்படி தகவலானது தொலைபேசி மூலமாகவா அல்லது எழுத்து மூலமாகவா என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். தகவல் வந்த விபரத்தை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்ததாக என்னுடைய முதல் தகவல் அறிக்கை, பிரிவு-57 அறிக்கை என்னுடைய ஆய்வாளர் விசாரணையின்போது நான் பதிவு செய்யதாக சொல்லக்கூடிய பொதுநாட்குறிப்பின் நகலை எதேனும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. சோதனை சம்மத கடிதம், அத்தாட்சி போன்றவை எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சம்பவஇடத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது. சோதனை சம்மதம் எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்றால் 11.45 மணிக்கும் அத்தாட்சி 12.00 மணியிலிருந்து 13.00 மணி வரை தயார் செய்யப்பட்டது. வழக்கின் முதல் தகவல் அறிக்கை எத்தனை மணிக்கு தயாரிக்கப்பட்டது என்றால் 15.30 மணிக்கு தயார் செய்யப்பட்டது. 15.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய பின்னர் தான் வழக்கின் குற்றஎண் தெரியவரும் என்றால் சரிதான். பிரிவு-57ன் படியான விரிவான அறிக்கை எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்றால் 15.30மணிக்கு தயார் செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாகவே விரிவான அறிக்கை தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அத்தாட்சி, சோதனை சம்மத கடிதம் மற்றும் இதர ஆவணங்கள் யாரால் எழுதப்பட்டது என்ற விபரம் ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 12.00 மணி முதல் 13.00 மணிக்குள் தயாரிக்கப்பட்ட அத்தாட்சியில் 15.30 மணிக்கு பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் குற்றஎண், சட்டப்பிரிவுகள் அத்தாட்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு தயாரித்ததாக சொல்லக்கூடிய பிரிவு57 விரிவான

அறிக்கையிலும் குற்ற எண்ணும் , சட்டப்பிரிவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.2 அத்தாட்சியில் எதிரியுடைய கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1 சோதனை சம்மத கடிதத்திலும் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1 சோதனை சம்மத கடிதமும், அ.சா.ஆ.2 அத்தாட்சியும் ஒரே நேரத்தில் தயார் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். வழக்கில் பிரிவு-57ன் படியான விரிவான அறிக்கையை என்னுடைய உயர் அதிகாரி பார்வையிட்டதாகவோ அதை பெற்றுக்கொண்டதாகவோ எந்த விதமான மேற்குறிப்பும் இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.2 அத்தாட்சியில் மாதிரிக்காக போலீஸ்பட்டன்சீலோ, SHOசீல் எதுவும் வைக்கப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் மாதிரிகள் எடுக்கப்பட்டதாகவோ அதற்கு ஏதேனும் சிறப்பு குறியீடு கொடுக்கப்பட்டதாகவோ அத்தாட்சியில் காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சொல்வதுபோல் எனக்கு எந்தவிதமான தகவலும் வரவில்லை என்றாலும் அதன்பேரில் எந்தவிதமான ரோந்து நடவடிகக்கையும் நான் மேற்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்ன தேதி நேரத்தில் எந்தவிதமான கஞ்சாவும் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை, சொன்ன இடத்தில் வைத்து கைதுசெய்யப்படவில்லை என்றாலும், வழக்கிற்கும், வழக்கின் சொத்திற்கும், எதிரிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.